DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 188/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 12 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. சத்தியவேந்தன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of August 2026.

**(A1 died. A2, A3 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவேங்கடம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 04.05.2020 காலை 09.10 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி அங்கு சென்று, காலை 10.00 மணிக்கு சிகிச்சையிலிருந்த மைப்பாறை கீழத்தெரு சுப்பையா மகன் முருகன், வயது 55 என்பவர் பேச

முடியாத சூழ்நிலையில் இருந்தார். எனவே அவருடன் இருந்த அவரது மகன் கணேசன் என்பவர் நடந்த சம்பவத்திற்கு எழுத்து பூர்வமாக கொடுத்த புகார் மனுவை பெற்று, காலை 11.15 மணிக்கு காவல் நிலையம் வந்து, நிலைய குற்ற எண், 105/2020 சட்டப்பிரிவு 294(b), 427, 452, 324, 307, 506(ii) IPC ஆக வழக்கு பதிவுசெய்தேன். அ.சா.1 கணேசன் கொடுத்த **புகார் மனு அ.சா.ஆ. 6** ஆகும். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7** ஆகும். வாதியின் புகார் மனுவையும், அசல் முதல் தகவல் அறிக்கையையும் கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், சங்கரன் கோவில் அவர்களுக்கு அனுப்பியும், விசாரணை நகலை ஆய்வாளர், குருவிகுளம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பினேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

நான் புகார் மனுவை பெற்றபோது, மருத்துவமனையில் மருத்துவர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. மருத்துவர் காயம்பட்ட முருகனுடன் இருந்தார். புகார் கொடுத்த கணேசன் என்பவருக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் அது பற்றி நான் கேட்கவில்லை. நான் முதல் தகவல் அறிக்கையை குருவிகுளம் ஆய்வாளர் வசம் கொடுத்தபோது, அவர் காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் குருவிகுளம் காவல்நிலையத்தில்தான் இருந்தார். முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு 04.05.2020 ஆம் தேதி இரவு 07.40 மணிக்குத்தான் வந்தடைந்துள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் பணியில் இருந்தபோது, காவலர் ஒருவர் மூலமாக நீதிமன்றத்திற்கு கொடுத்து அனுப்பினேன், அந்த காவலர் பெயர் தற்போது எனக்கு நினைவில்லை. சங்கரன்கோவில் நீதிமன்றத்திற்கும் எங்கள் காவல்நிலையத்திற்கும் 5 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 18 கி.மீ தொலைவு இருக்கும். நான் சொன்னதுபோல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்படவில்லை என்றும், நீதிமன்றத்திற்கு மேற்படி ஆவணங்கள்

அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்காக மேற்படி ஆவணங்கள் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 188/2022**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 13 |
| | Defence | | |
| | Court | | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கண்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of July 2026.

**(A1 died. A2, A3 Present. )**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 04.05.2020ம் தேதி குருவிகுளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, திருவேங்கடம் காவல் நிலைய கூடுதல் பொறுப்பு வகித்திருந்தேன். அன்றைய தினம் திருவேங்கடம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 105/2020, பிரிவுகள் 294(b), 427, 452, 506(ii), 324, 307 IPC வழக்கு

பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்திருந்ததை, விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் மதியம் 01.00 மணியளவில் சம்பவ இடமான மைப்பாறை வாதியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் தேவேந்திரபாண்டியன் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 8** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9** ஆகும்.

2) பின்னர் அன்றைய தினம் மதியம் 01.30 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட தொரட்டி அரிவாள் மற்றும் கம்பு ஆகியவற்றை படிவம் – 91 பிறப்பித்து கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த **படிவம் 91 அ.சா.ஆ. 10** ஆகும். அந்த **தொரட்டி அரிவாள் சா.பொ.1** ஆகும். **கம்பு சா.பொ.2** ஆகும். பின்னர் வழக்கின் வாதியான கணேசன் என்பவரையும், மற்றும் சாட்சிகள் தங்கமாரியப்பன், சந்திரன், கிருஷ்ணசாமி, தேவேந்திரபாண்டியன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் கிடைத்த தகவலின்படி 04.05.2020ம் தேதி மாலை 04.00 மணியளவில் மைப்பாறை, பெருமாள் கோவில் மலை அருகே இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் கருப்பசாமி மற்றும் அய்யனார் ஆகிய இருவரையும் கைது செய்தேன். அதன் பின் எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கலைவாணன் மற்றும் பாலாஜி ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தேன். அந்த **ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ. 11** ஆகும். அதன் பின் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட அரிவாள் மற்றும் கம்பு ஆகியவற்றை எதிரிகளிடம் காண்பித்து சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டவை அவை தான் என்பதை உறுதி செய்தேன். மேலும், எதிரிகளுடன் திருவேங்கடம் காவல் நிலையம் வந்து உச்ச நீதிமன்ற வழிமுறைகளின்படி தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3) அன்றைய தினமே, சாட்சிகள் சார்பு ஆய்வாளர் திரு.சத்தியவேந்தன், திரு. கலைவாணன், பாலாஜி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம்

பதிவுசெய்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட முருகன் என்பவர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி TVMCH சென்று சிகிச்சையில் இருந்தவர் 06.05.2020 ம்தேதி அதிகாலை 05.00 மணியளவில் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்படி அன்றைய தினம் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து 294(b), 427, 452, 324, 506(ii), 302 r/w 34 IPC ஆக பிரிவு மாற்றம் செய்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 12** ஆகும்.

4) கடந்த 06.05.2020 ம் தேதி காலை 09.45 மணியளவில் திருநெல்வேலி TVMCH சென்று பிணவறையில் இருந்த இறந்த முருகன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13** ஆகும். அதன் பின்பு, திருவேங்கடம் காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு. கல்யாணதுரை என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த பணிக்காக திரு. கல்யாண துரைக்கு வழங்கப்பட்ட **கடவுச்சீட்டு அ.சா.ஆ. 14** ஆகும். பிரேதத்தின் உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பகுப்பாய்விற்காக சேகரித்து வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலிக்கு அனுப்பி அறிக்கை பெற நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் பெறப்பட்ட **உடல் உள்ளுறுப்பு அறிக்கை அ.சா.ஆ. 15** ஆகும்.

5) பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை நல்லடக்கம் செய்யவேண்டி பிரேதமானது அவரது உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், அன்றைய தினம் சாட்சிகள் ராஜேந்திரன், சரவணகுமார், கணேசன், சரோஜா, கருப்பம்மாள் மற்றும் காவலர் திரு. கல்யாண துரை ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் மருத்துவர் திரு.அருண்பாண்டியன் மற்றும் மருத்துவர் திரு. செல்வமுருகன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

6) இந்நிலையில் கடந்த 12.05.2020ம் தேதி கிடைத்த தகவலின்படி சந்திரகிரி கிராமம் தங்கபாண்டியன் என்பவர் வீட்டில் இவ்வழக்கின் முதல் எதிரி அய்யனார் என்பவர் இருந்தவரை அன்றைய தினம் மதியம் 02.00 மணியளவில் கைது செய்தேன். பின்னர் 15.00 மணியளவில் திருவேங்கடம் காவல்நிலையம் கொண்டுவந்து உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி எதிரியை நீதிமன்றத்திற்கு அனுப்பி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், 15.05.2020 அன்று இவ்வழக்கில் சேதமடைந்த வீட்டின் முன்புற கதவை மாரியப்பன் ஆசாரி என்பவரிடம் காட்டி அவரிடம் சேத மதிப்பு சான்று பெற்றேன். அந்த **சேத மதிப்பு சான்று அ.சா.ஆ. 16** ஆகும். இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால், எதிரிகள் அய்யனார், கருப்பசாமி மற்றும் மற்றொரு அய்யனார் ஆகியோர் மீது பிரிவுகள் 294(b), 427, 452, 324, 506(ii), 302 r/w 34 IPC படி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

7) என்னுடைய விசாரணையில் இவ்வழக்கின் சாட்சிகள் கணேசன், தங்கமாரியப்பன் ஆகியோர் வழக்கு சம்பவம் குறித்து சாட்சிகள் கலைவாணன், பாலாஜி ஆகியோர் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் குறித்தும், அதில் அவர்கள் சாட்சி கையொப்பமிட்டதை பற்றியும் கூறினார்கள். சாட்சிகள் சரவணக்குமார் மற்றும் சரோஜா, கருப்பம்மாள் ஆகியோர் சம்பவம் குறித்தும் நான் பிரேத விசாரணை செய்தது குறித்தும் கூறினார்கள். சாட்சிகள் கிருஷ்ணசாமி மற்றும் தேவேந்திர பாண்டியன் ஆகியோர் நான் சம்பவ இடத்தை ஆய்வுசெய்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், அதில் அவர்கள் சாட்சி கையொப்பமிட்டது குறித்தும் எனது விசாரணையின்போது கூறினார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) கடந்த 04.05.2020 அன்று எதிரிகளை கைது செய்து, இரவு 07.40 மணிக்குத்தான் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் செய்தேன் என்றால் மாலை 05.30 மணிக்கு திருவேங்கடம் காவல் நிலையத்திலிருந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல்

உதவி ஆய்வாளரை நான் விசாரித்தபோது, எந்த காவலர் மூலமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றம் அனுப்பப்பட்டது என்பது குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், ஆனால் அவரது பெயர் தற்போது நினைவில்லை. முதல்தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு இரவு 07.40 மணியளவில் தான் வந்தடைந்துள்ளது என்றும்,எனவே நான் எதிரிகளை 05.30 மணிக்கே நீதிமன்றம் அனுப்பிவிட்டதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் எதிரிகளை கைது செய்த பின்னர்தான் இவ்வழக்கிற்காக பின்னிட்டு ஒரு புகார் தயார் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) புகார் கொடுத்த அ.சா.1 கணேசனுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. காயம்பட்டு சிகிச்சையிலிருந்து இறந்துபோன முருகன், புகார் மனு பெறப்படும் போது மயக்க நிலையில் இருந்ததாக உதவி ஆய்வாளர் எனது விசாரணையில் சொன்னார் என்றால் சரிதான். அப்போது மருத்துவர் உடன் இருந்தாரா என்பது குறித்து உதவி ஆய்வாளரை விசாரித்தேனா என்றால் இல்லை. இறந்துபோன முருகன், காயம்பட்ட நிலையில் மருத்துவமனை சிகிச்சையிலிருந்தபோது தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து முருகன் சொன்னதாகத்தான் மருத்துவர் விபத்து பதிவேடு நகலில் பதிவுசெய்துள்ளார் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் எத்தனை மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து திருநெல்வேலி அரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது.

3) பார்வை மகசரை தயார் செய்தபோது, படிவம் – 91 ஐ சம்பவ இடத்தில் தயார் செய்தேனா அல்லது காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேனா என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன். படிவம் – 91ல் சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே பார்வை மகசர் மற்றும் படிவம் – 91 ஆகியவை காவல்

நிலையித்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால்தான் அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி பின்னிட்டு, திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர் தயார் செய்யப்படவில்லை என்றும், அதனால்தான் பார்வை மகசரில் உள்ள தேதியில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4) ஒப்புதல் வாக்குமூலமானது எதிரி கருப்பசாமியிடம் மட்டும் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் கருப்பசாமி மற்றும் அய்யனார் ஆகிய இருவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்தவொரு சான்று பொருளும் புதிதாக கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனவே மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரை குருசாமி என்பவர் மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிடப்படும் நிலையில் மேற்படி குருசாமி சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை மருத்துவரிடம் காட்டி மேற்சொன்ன ஆயுதங்களால் முருகனுக்கு ஏற்பட்ட காயங்களை விளைவிக்க முடியுமா என விசாரித்து கருத்துரு பெற்றேனா என்றால் இல்லை.

5) சேதமடைந்த கதவை காலால் எட்டி உதைத்ததாக மட்டும்தான் சாட்சிகள் கூறியுள்ளார்கள் என்றும், அரிவாளால் வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. முறையான அனுமதி பெற்ற நபரிடம் சேத மதிப்பு சான்று பெறப்படவில்லை என்றும், எனவே மேற்படி ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும், சான்று பொருட்களை கைப்பற்றியதாக சொல்வதும், எதிரிகளை கைது செய்ததாக சொல்வதும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக

சொல்வதும், அதன் அடிப்படையில் எதிரிகள் பயன்படுத்திய ஆயுதம் குறித்து உறுதி செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சொன்ன நாள் சொன்ன நேரத்தில் விசாரித்ததாக சொல்வதும், பொய் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சான்று பொருட்கள் நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் ஒரு தலைபட்சமாக விசாரித்து எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi